**காத்தான்குடி நகர சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 06 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 02 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 19 திகதி நகர சபையின் நகர ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து காத்தான்குடி நகர சபையின் 2014 திசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்படடிருந்த போதிலும் பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 2 இன் பிரகாரம் அது முறையாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 பெறவேண்டிய கணக்குகள்

மரணமடைந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா.42,037 கடன் மீதியை மரணப் பணிக்கொடையிலிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் கணக்கிடப்படுகின்றது.

#### 1.3.3 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடான இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) பிரிவு 177 (2) | 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் சுருக்கம் பொது மக்களின் தகவலுக்காக அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு சபையால் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.12,602,309 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.4,354,466 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா.8,247,843 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றுக்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டடுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | அறவீடு செய்யப்பட்டது | வித்தியாசம் | சதவீதம் |
| --- | --- | --- | --- | --- |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | % |
| வீத வரிகள் | 8,900 | 8,730 | 170 | 01 |
| வாடகை | 5,100 | 4,445 | 655 | 12 |
| ஏனைய வருமானம் | 21,145 | 14,674 | 6,470 | 30 |

#### 2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) 160ஆம் பிரிவுக்கு அமைய, நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2014 ஆம் ஆண்டு இறுதிவரை அறவிடவேண்டிய ரூபா.4,965,387 கூட்டு மொத்தமான வீதவரிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதிமன்றத்திடமிருந்து 2014 திசெம்பர் 31 இல் கிடைக்கவேண்டிய ரூபா.381,572 தொகையான நீதிமன்ற தண்டப்பணத்தை மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 சபைக் காணியை குத்தகைக்கு வழங்கல்

சபைக்கு சொந்தமான 15 பேர்ச் அளவுடைய காணி ஒரு தனியாருக்கு மீளாய்வாண்டில் 02 வருட காலத்திற்கு பொருத்துகள் (Paved Blocks) தயாரிக்கும் தொழிற்சாலையை நடாத்துவதற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இது தொடர்பாக, பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்க பிரதம மதிப்பீட்டாளரிடம் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்படாது இக்காணி குறித்த நபருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) இக்காணிக்கான தற்போது நிலவும் மாதாந்த குத்தகைப் பெறுமதி ரூபா.20,000 ஆகக் காணப்பட்ட போதிலும் ரூபா.7,500 மாதாந்த குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதால் சபை ரூபா.150,000 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

(இ) உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் பிஸ்/1/05/25 இலக்க 2009 திசெம்பர் 14 திகதிய கடிதத்திற்கு அமைய, உள்ளூராட்சி மன்றத்துக்கான காணியை குத்தகைக்கு விடுவதற்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் சந்தர்ப்பத்தில் காணியின் தற்போதைய பெறுமதி மதிப்பிடப்பட்டு அப் பெறுமதியில் 25% ஆன தொகை ஆரம்பக் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 3 மாத குத்தகைப் பணமாகிய ரூபா.22,500 மாத்திரமே ஆரம்பக் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2.5 வியாபார உரிமைக்கட்டணம்

மீளாய்வாண்டில் அறவிடப்பட வேண்டிய ரூபா.129,975 தொகையான வியாபார உரிமைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 ஏனைய வருமானங்கள்

சபையின் மடுவத்தில் அறுக்கப்படும் மாடுகளின் மாட்டுத்தோல்களை 2012 ஒக்டோபர் 10 ஆந் திகதியிலிருந்து 10 வருடங்களுக்கு விற்பனை செய்வதற்காக ஒரு தனிநபருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 வரை ரூபா.514,000 வருமானமாக பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மாட்டுத்தோல் விற்பனை தொடர்பாக கேள்விதாரர்களை தெரிவு செய்வதற்கு பெறுகை வழிகாட்டியின் 2:14:1 பிரிவின் பிரகாரம் கூறுவிலைகள் கோரப்பட்டிருக்கவில்லை.

மேலும், நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) பிரிவு 39 இன் பிரகாரம் ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட ஒப்பந்தங்கள் எதுவும் சபையின் சம்மதமின்றி நகரசபை தலைவர் ஒப்பந்தம் செய்தலாகாது. இருந்தபோதிலும், மேற்படி சட்ட ஏற்பாட்டிற்கு முரணாக சபையின் தவிசாளரால் மேற்படி விடயத்திற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) திருகோணமலைக்கும் கிண்ணியாவிற்கும் இடையே பயணிகள் சேவையை நடாத்துவதற்கு பயன்படுத்தப்பட்டு அவற்றிற்கிடையே பாலம் நிர்மாணிக்கப்பட்ட பின் கைவிடப்பட்ட பிரயாணிகள் படகு ( Passenger Ferry ) காத்தான்குடிக்கும் படுவான்கரைக்கும் இடையே பிரயாணிகள் படகுச்சேவையை ஆரம்பிப்பதற்காக 2013 ஆம் ஆண்டில் ரூபா.323,550 செலவு செய்து காத்தான்குடிக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் இன்று வரை பயன்படுத்தப்படாது வைத்திருக்கப்பட்டுள்ளது.

(ஆ) சபையினால் 1995 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை ஊழியர்களின் ஓய்வூதியத்திட்டதிற்கு பங்களிப்புப் பணமாக ரூபா.2,375,058 தொகையான பங்களிப்பு பணத்தை செலுத்த வேண்டியிருந்த போதிலும் அதனைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1987 ஆம் ஆண்டு பிரதேச சபைகள் உருவாவதற்கு முன்பு பட்டினாட்சி மன்றமாக செயற்பட்ட காலத்தில் இலங்கை மின்சார சபை சார்பாக பொது மக்களுக்கு மின்சாரம் வழங்குதல் சபையால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா.2,399,352 முற்பணங்களை அறவிடுவதற்கு சபையால் 1991 ஆம் ஆண்டிலிருந்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மின்சாரம் வழங்கிய வகையில் பொதுமக்களால் மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா.6,642,880 மின்சார நிலுவையை அறவிட கடந்த 21 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) இன் பிரிவ 227 (ஐ) இன் பிரகாரம் சபையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திலோ அதற்காக நிறைவேற்றப்பட்ட கருமத்திலோ நேராகவோ மறைமுகமாகவோ ஏதேனும்மொரு நகரசபையின் உறுப்பினரோ, அலுவலரோ, ஊழியரோ அக்கறையுடையவராக அல்லது பணவக்கறையுடையவராகவிருத்தலாகாது. எவ்வாறாயினும், சபையின் தவிசாளரின் சகோதரருக்கு சொந்தமான வான் வண்டி வாடகைக்கு அமர்த்தப்பட்டு ரூபா.1,172,095 தொகை வாடகைக் கட்டணமாக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) ஐம்பது PVC குழாய்கள், இரண்டு கல்லு வெட்டும் இயந்திரங்கள், இரண்டு FOTON ரக வாகனங்களை, ஒரு கொம்பெக்டர் ரக வாகனம் மற்றும் ஒரு நீர் இறைக்கும் பம்பி போன்றவை இரண்டு வருடங்களுக்கு மேலாக சபையில் காணப்பட்ட போதிலும் அவை 2014 ஆம் ஆண்டிற்கான கணிப்பீட்டு சபை (Board of Survey) அறிக்கை, நிலையான சொத்துப்பதிவேடு மற்றும் அருப்பு பதிவேடு என்பவற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

சபைக்குச் சொந்தமான NIZAN ரக வாகனம் பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படாமல் ரூபா.1,190,000 செலவு செய்து ஒரு தனியார் கராஜில் மீளாய்வாண்டில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. எவ்வாயாயினும், மேற்படி வாகனம் மீண்டும் பழுதடைந்ததன் காரணமாக பாவிக்கப்படாமல் தற்பொழுது வாகனத்தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

### 3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான திண்மக்கழிவுகளை அகற்றுவதற்கு பயன்படுத்தக் கூடிய 23 இழுவை பெட்டிகள் உழவு இயந்திரம் இல்லாமையால் சுமார் 05 வருடங்களிற்கு மேலாக பாவிக்கப்படாமல் சபையில் வேலைத்தளத்தில் உள்ளது.

(ஆ) சபைக்கு அனர்த்த நேரத்தில் பயன்படுத்துவதற்கு USAID நிறுவனத்தால் வழங்கப்பட்ட படகும் இநந்திரமும் (Outboard engine) ஒரு தனி நபருக்கு எதுவித ஒப்பந்தமும் இல்லாமல் இரண்டு வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயிரும், இயந்திரத்திற்கான வாடகையை அறவிடுவதற்கு அல்லது இயந்திரத்தை மீளப் பெறுவதற்கு இன்று வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவம்

‘‘பிலிசரு’’ திட்டத்தின் கீழ் கூட்டுப்பசளை தயாரிப்பு நிலையம் ரூபா.1,669,227 கிரயத்தில் 2013 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திண்மக் கழிவுகளை கொண்டு கூட்டுப்பசளை தயாரிப்பதற்காக தனியான ஒரு நிலையம் அமைக்கப்பட்டிருந்த போதிலும், திண்மக் கழிவுகள் சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள ஆற்றங்கரையில் கொட்டப்படுகின்றது.

(ஆ) சபைக்குச் சொந்தமாக 20 வாகனங்கள் காணப்பட்டிருந்த போதிலும், ஆற்றங்கரையில் கொட்டப்பட்ட திண்மக் கழிவுகளை மூடுவதற்கு மண் ஏற்றியிறக்கிய லொறிக் கூலியாக ரூபா.90,000 தொகை ஒரு ஒப்பந்தக்காரருக்கு 2014 யூன் 02 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமாக ரூபா.11,900,000 பெறமதியான ‘‘பெக்கோ’’ லோடர்இயந்திரம் இருந்தபோதிலும், ஆற்றங்கரையில் கொட்டப்பட்ட திண்மக் கழிவுகளை சமப்படுத்தியதற்காக ஒரு பெக்கோ இயந்திரம் வாடகைக்கு பெறப்பட்டு ஒரு தனி நபருக்கு ரூபா.40,000 தொகை 2014 யூலை 11 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) சபையில் 15 உழவு இயந்திரங்கள் காணப்பட்டும் திண்மக்கழிவுகளை அகற்றுவதற்கு உழவு இயந்திரங்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டு ஒரு தனி நபருக்கு ரூபா.1,500 படி ரூபா.156,000 மொத்த தொகை மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) திண்மக்கழிவுகள் ஆற்றங்கரையில் கொட்டப்பட்டு சூழல் மாசடைவதால் பொது மக்களால் சபைக்கு எதிராக பல வழக்குகள் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---------------------------------------------------------------

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 57% தொடக்கம் 95% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக்கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

## 5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

----------------------------------------------------

கீழ்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேடகவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) ஒப்பந்த நிர்வாகம்
(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஈ) வருமான முகாமைத்துவம்
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு